COMITE DE COORDINATION TAMOUL - FRANCE
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ்
TAMIL CO-ORDINATING COMMITTEE - FRANCE

www.tamilarangam.net

08. 06. 1992

இந்தியா, தமிழீழ மக்களுக்குத் தொடர்ந்து புரிந்து வரும் துரோகத்தனத்தில், விடுதலைப் புலிகளை தனது நாட்டில் தடை செய்ததானது உச்சக் கட்டமாக உள்ளது. மேலும், ராஜீவ் கொலையில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைக் குற்றப்படுத்தி, நாடு கடத்துமாறு ஸ்ரீலங்கா அரசிடம் இந்தியா கேட்டதானது, தமிழீழ மக்களுக்கும், விடுதலை போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிரான போர்ப் பிரகடனமாகவே அமைந்துள்ளது. இந்தியா தொடுத்த இராணுவ ரீதியான போரை எவ்வாறு தமிழீழ மக்கள் முறியடித்தார்களோ, அதே போன்று, சட்ட ரீதியான, அரசியல் ரீதியான, ராஜதந்திர ரீதியான இப் போரையும் தமிழீழ மக்கள் மாபெரும் தலைவர் பிரபாகரனின் வழி நடத்தலில் நிச்சயம் முறியடிப்பார்கள். இன்னொரு படை எடுப்பெனில் அதற்கும் தயாராகவே விடுதலைப் புலிகள் உள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இந்தியா செயல்படுகின்றது என்பது 1985 இல் இடம் பெற்ற திம்பு மகாநாட்டில் இருந்து இந்திய -ஸ்ரீலங்கா ஒப்பந்தம் உட்பட, இன்று வரை இந்தியா செய்து வரும் செயல்கள் அப்பட்டமாக நிரூபிக்கின்றன. அண்மைக்காலங்களில், ஸ்ரீலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, தமிழீழ அகதிகளைப் பலவந்தமாகத் திருப்பி அனுப்புவதோடு, விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு ஸ்ரீலங்காவுடனான இராணுவக் கூட்டுக் குறித்து ஆலோசித்து வருவதானது, இந்தியாவின் கோரமான துரோக முகத்தை, வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளது. தேசிய இனப் பிரச்சனையில் இந்தியா தொடர்ந்து தமிழீழ மக்களுக்கு துரோகம் இழைக்கவே செய்யும் என்பது தெளிவாகக் காணப் படுகின்றது. இந்தியாவில் பெரியதொரு புரட்சிகர மான மாறுதல், அகன்று விரிந்த தூரப் பார்வை உள்ள ஒரு தலைவன், தோன்றும்வரை இந்தியாவின் போக்கு இப்படித்தான் இருக்கும். முன்னே நோக்கிச் செல்லும் வரலாற்றைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் தடுமாறிக் கொண்டேயிருக்கும். இந்தியாவின் தடுமாற்றத்தை காரணம் காட்டித் தமிழீழ விடுதலையை தடுத்து வைத்திருக்க முடியுமா? அது போடும் தடைகளை உடைத்தெறிவது தவிர வேறு வழியில்லை. எமக்கு உரித்தான உரிமையை அழிக்க முற்படுபவனிடம் சரணாகதி அடைவதே சரியென உபதேசம் செய்யும் கோழைகள் "அறிவாளிகளாக" அறிவுரை கூறுகின்றனர். கோழைத்தனம் அறிவுடமையாகாது. தொடை நடுங்கிகள் விடுதலை வீரர்களாக முடியாது. இவர்கள் தங்கள் நாட்டை மட்டுமல்ல; வீட்டையே காக்க முடியாதவர்கள். இராணுவ ரீதியாக, அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, சர்வதேச அரசியல் ரீதியாக, இந்திய -ஸ்ரீலங்கா கூட்டு, தமிழீழத்தை அழிக்க முற்படுகின்றது.

இந்தியா விடுதலைப் புலிகள்மேல் விதித்த தடை, ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கு தனது ஆசீர்வாதத்தை அளித்ததுபோல் ஆகின்றது. தமிழீழ மக்களின் அபிலாஷைகளை நசுக்கி அழி என்று சமிக்சை கொடுத்ததுபோல் அமைகின்றது. இதன் விளைவே யாழ்பாணக் குடாநாட்டின் மீதான ஸ்ரீலங்காவின் படையெடுப்பு. பேச்சுவார்த்தைக்கான கதவுகளைத் தான் மூடவில்லை என்று கண்துடைப்பாக, விடுதலைப் புலிகள் மீதான தடையை ஸ்ரீலங்கா அரசு செய்யவில்லை. ஆயினும், இந்தியா விதித்த தடையை தனக்குப் சாதகமாகப் பயன்படுத்தி, இராணுவ வெற்றியைக் காணலாம் என்ற நப்பாசையில் ஸ்ரீலங்கா அரசு செயற்படுகின்றது. இதன் விளைவு, நூறுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள், கொடூர இனவெறித் தாக்குதல்களினால் கொல்லப்பட்டும், பலகோடி மதிப்புள்ள பொருட்கள், சொத்துக்கள் சேதமாக்கப்பட்டும் உள்ளதுடன் இருபத்தெட்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

எமது தேசம் அழியாமல் வாழ வேண்டுமாயின் போராடத்தான் வேண்டும். இது எமக்கு வரலாறு விதித்த சவால். இம்மலை போன்ற சவாலை ஏற்று வென்று, உயரப்போகின்றோமா அல்லது நாயிலும் கீழாக நலிந்து பிழைக்கப் போகின்றோமா? தமிழீழம் சமாதானத்தையும், சுதந்திரத்தையும் விரும்புகின்றது. அதன் மீது போரைத் தொடுக்க வேண்டாம். இறுதியில் தோல்வியுறப் போவது அடக்குமுறையாளர்களே. ஏனெனில், உண்மையும், நீதியும் தமிழீழப் போராட்டத்தின் ஆதாரமாய் உள்ளன. ஸ்ரீலங்கா, இந்திய இராணுவங்களால் கொல்லப்பட்ட எமது மக்களின் புதைகுழிகளில் மேல் நின்று சத்தியம் செய்வோம்.

**இந்திய அரசு ராஜதந்திர ரீதியாக, விடுதலைப் போராட்டத்தை அழிக்க எடுத்த முயற்சியையும், ஸ்ரீலங்காவின் யுத்த முயற்சியையும் முறியடிப்போம்.**

**இவை எமது சுதந்திரப் பாதையில் எழுப்பப்பட்ட சுவர்கள். இச்சுவர்களை உடைத்து முன்னேற நாம் அனைவரும் அணிதிரள்வோம்.**

**நாம் வேண்டுவது எமது சுதந்திரம். அதனை நாம் போராடிப் பெறுவது நிச்சயம்.**

Siège Social : 341, rue des Pyrénées - 75020 PARIS
Téléphone : 43 58 11 42 Télécopie : 43 58 11 91

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்